மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம்
தருமபுரி மாவட்டம்

தருமபுரி மாவட்டம், காரிமங்கலம் வட்டம், காரிமங்கலம் ஊராட்சி ஒன்றியம், பூமாண்டஅள்ளி ஊராட்சி மற்றும் கிராமம், ச.எண்:71/1,71/2,72,73/2,74/2B -ல் அமையும் குடியிருப்பு மனைப்பிரிவிற்கான தொழில்நுட்ப ஒப்புதல் வரைப்படம்.

அளவு : 1:400 (மீட்டரில்)

வ

இணையத்தள விண்ணப்ப எண்: **X4BGZ156**

குறிப்பு:

மனைப்பிரிவின் பரப்பு	:	3.84.64 ஹெக்டேர் (அ) 38464.00 ச.மீ
உத்தேச மனைப்பிரிவின் சாலை பரப்பு	:	12096.54 ச.மீ
மனைப்பிரிவின் பரப்பு (சாலை பரப்பு நீங்கலாக)	:	26367.46 ச.மீ
ஒதுக்கிய மனைகள்	:	192 (வரியோர் பிரிவு மனைகள்: 41 முதல் 52 வரை (ம) 53 முதல் 58 வரை (ம) 88 முதல் 95 வரை (ம) 96 முதல் 101 வரை (ம) 132 முதல் 137 வரை (ம) 138 முதல் 143 வரை (ம) 172 முதல் 177 வரை) = 2738.51ச.மீ (10.39%)
மனைப்பிரிவின் எல்லை	:	
நிலையில் உள்ள சாலை	:	

பொது ஒதுக்கீடு:

உள்ளாட்சிக்கு தானமாக ஒப்படைக்கப்பட்டவை:

உத்தேச மனைப்பிரிவின் சாலை பரப்பு	:	12096.54 ச.மீ	
பூங்கா-1 (OSR)	:	1961.10 ச.மீ	
பூங்கா-2 (OSR)	:	693.80 ச.மீ	
மொத்த பூங்கா (OSR) பரப்பளவு	:	2654.90 ச.மீ	(10.07%)
உள்ளாட்சிக்கு தானமாக ஒப்படைக்கப்பட்ட பொது உபயோகம்	:	133.39 ச.மீ	(0.506%)

தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகத்திற்கு தானமாக ஒப்படைக்கப்பட்டவை:

தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகத்திற்கு தானமாக ஒப்படைக்கப்பட்ட பொது உபயோகம்	:	133.09 ச.மீ	(0.505%)

மூலை முடக்கு : 12.0மீ அகல சாலைகள் வரை 1.5மீ x 1.5மீ விடப்படல் வேண்டும்.

கட்டிட வரம்பு : 9.00மீ அகல சாலைகள் வரை 1.5மீ விடப்படல் வேண்டும்.
9.00மீ முதல் 18.0மீ அகல சாலைகள் வரை 3.0மீ விடப்படல் வேண்டும்.

நிபந்தனைகள்:

1. அரசாணை எண். 181 வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சித்துறை நாள்: 09.12.2020-ன் படி நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும்.

2. இம்மனைப்பிரிவிற்கு உள்ளாட்சி இறுதி ஒப்புதல் அளிக்கும் முன் இடத்தினை எந்தத்துறையாலும் நில ஆர்ஜித நடவடிக்கை மேற்கொள்ளப்படவில்லை என்றும், எந்த துறைக்காகவும் நில ஆர்ஜிதப்பட்டியலில் மாவட்ட வருவாய் அலுவலரும் அனுப்பப்படவில்லை என்றும், உள்ளாட்சியால் உறுதி செய்து கொள்ள வேண்டும்.

3. நில உரிமம் குறித்து வழங்கப்பட்ட சான்றுகள் மற்றும் பரிசீலனைக்கு சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்கள் சரியானவையல்ல என்று அறியப்பட்டாலோ அல்லது மனைப்பிரிவுக்கு தொழில்நுட்ப ஒப்புதல் வழங்கியதால் பாதிப்பு ஏற்படக்கூடிய சூழ்நிலை ஏற்படின் மனைப்பிரிவுக்கு வழங்கப்பட்ட தொழில்நுட்ப ஒப்புதல் எவ்வித முன்னறிவிப்புமின்றி நகர் ஊரமைப்பு இயக்குநர், அவர்களால் இரத்து செய்யப்படும்.

4. விற்பனைக்குண்டான மனைகளை விற்பனை செய்யும் போது இவ்வாணையின் நகலோடு நகர் ஊரமைப்புத்துறையில் ஒப்புதல் அளிக்கப்பட்ட வரைப்பட நகல் மனை வாங்குபவர்களுக்கு கட்டாயம் வழங்கப்பட வேண்டும்.

5. ஒப்புதல் அளிக்கப்பட்ட மனைப்பிரிவு வரைப்படத்தை எந்தவித மாற்றம் விடுதலின்றி மனைப்பிரிவு நுழைவாயிலில் 6' x 4' அளவிலான நிரந்தர தகவல் பலகை மூலம் பொதுமக்கள் பார்வைக்கு நிரந்தரமாக பிரசுரிக்கப்பட வேண்டும்.

6. நகர் ஊரமைப்பு துறை சட்டப்பூர்வமாக தொழில்நுட்ப அனுமதி அளிப்பதின் மூலம் விண்ணப்பதாரரின் பெயரில் உள்ள நில உரிமையை உறுதிப்படுத்தவில்லை. தொழில்நுட்ப அனுமதி அழிப்பதற்கு முன்பு விண்ணப்பதாரரின் விண்ணப்பத்துடன் சமர்பித்த ஆவணங்களில் (கிரையப்பத்திரம், குத்தகை பத்திரம், பட்டா, தானப்பத்திரம், பொது அதிகார பத்திரம், மேலும் பல) விண்ணப்பதாரர் வளர்ச்சி செய்ய உரிமையுள்ளதா என்று மட்டுமே சரிபார்க்கப்படுகிறது. அதன் மூலம் முதற்கட்டமாக விண்ணப்பதாரருக்கு வளர்ச்சி செய்ய உரிமை உள்ளதா என்று பார்க்கப்படுகிறது.

7. The Tamil Nadu Government in G.O.Ms.No:112 Housing & Urban Development Department Dated 22.06.2017 Have Approved The Tamil Nadu Real Estate (Regulation at 2016 The Promoter has to advertise, Market, Book Sell (or) Invite the Person To Purchase Any Plot, Apartment (or) Building As The Case May Be In Any Real Estate Project of It only fter Registering The Real Estate Project With The Real Estate Regulatory Authority.

ம.வ/மா.ந.ஊ.அ.(த.மா) SWP எண்: 110/2023

உதவி இயக்குநர்,
மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம்,
தருமபுரி மாவட்டம்.

Signature Not Verified
Digitally signed by Director Town and Country Planning
Location: Dharmapuri
Date: 2023.11.07 17:07:00